திரு. மு. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கூறுகின்ற பொழுது பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மயிலாடுதுறை ஒரு டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸ். அதிலே நன்னிலம், மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி போன்ற தாலுக்காக்களிலே வழக்குகள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. வந்துகொண்டிருக்கின்ற வழக்குகளை உடனடியாக பைசல் செய்ய முடியாத நிலையில் வழக்குகள் ஆயிரக்கணக்கில் தேங்கியிருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே துரிதமாக நடவடிக்கை எடுத்து, வருகிற ஆண்டிலாவது கூடுதலான நீதிமன்றங்களை அமைத்துத் தந்து, அத்தோடு நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்குப் போதிய இருக்கைகள் இல்லாத காரணத்தினால், இடவசதியும், குடிதண்ணீர் இல்லாத காரணத்தினால், குடிதண்ணீர் வசதியும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே. ஏற்கனவே நான் கூறியவாறு அங்கே ஒரு "First Class Judicial நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவிலே அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

கோவை சட்டக் கல்லூரியில் சட்ட முதுகலை வகுப்பு தொடங்குதல்.

148—(*வினா எண் 10273) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சட்டக்கல்லூரியில் சட்ட முதுகலை வகுப்பு (Master of Law) தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினா எழவில்லை.

1987 மார்ச் 24]

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, புதிய வகுப்பு ஆரம்பிக்கிறது என்பது ஒரு பக்கம் இருக்க, வகுப்புகளை ஒழுங்காக நடத்துவதற்கு அங்கே கட்டிட வசதி இல்லை என்பதையும் வாடகைக் கட்டிடத்தில் அங்கு இருக்கிற வகுப்புக்களை நடத்தமுடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இதே சட்டமன்றத்தில் பல தடவை தெரிவித்திருக்கிறேன். புதிய கட்டிடமே கட்டப் போவதாக எனக்கு அப்போது பதிலும் சொல்லப்பட்டது. எப்போது அந்தக் கட்டிடம் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் படிப்பதற்கு இடவசதிதான் முக்கியம். சொந்தக் கட்டிடமா, வாடகைக் கட்டிடமா என்பது பிரச்சினை அல்ல. வாடகைக் கட்டிடம் போதிய அளவு கிடைக்குமானால், சொந்தக் கட்டிடத்திற்காக, அரசு பல இலட்சக்கணக்கான ரூபாயை செலவு செய்வதிலிருந்து விடுபட்டு, அந்தப் பணத்தை மிச்சம் செய்து, வேறு நல்ல பணிகளுக்கு செலவழிக்க முடியும். வாடகைக்கே வேறு கட்டிடம், போதிய அளவு அதிக இடம் கிடைக்குமா என்று அரசு பார்க்கச் சொல்லியிருக்கிறது. நிதித் தட்டுப்பாடு காரணமாக சொந்தக் கட்டிடம் கட்ட தற்போது இயலாது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பணிகள் போன்றவற்றிலே பணியாற்றுகின்றவர்கள், இப்படி முதுகலைப் பட்டங்களைக் கல்லூரிக்குச் செல்லாமல் நேரடியாக எழுதுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே இதுபோன்று, சட்டத்துறையிலே, சட்டமன்றத்தில் பணியாற்றுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நீதித்துறையில் பணியாற்றுகின்றவர்கள் இப்படி சட்டத்தில் முதுகலைப் பட்டங்களை கல்லூரிக்குச் செல்லாமல் சில குறிப்பிட்ட காலங்களிலே நேரடியாக பல்கலைக்கழகத்தில், தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'லேபரட்டரி அண்டு எக்விப்மெண்ட்ஸ்' என்ற சேவைகள் இல்லாத அளவிற்குப் பெறக் கூடிய பட்டங்

களைப் பெறுவதற்கு ஏற்கனவே சென்னைப் பல்கலைக்கழகத்திலும், மதுரை—காமராசர் பல்கலைக் கழகத்திலும், அதற்கான வசதிகள் இருந்து வருகின்றன. எந்தெந்தப் பட்டப் படிப்பு என்பதனைப் பொறுத்து, அதற்கான முடிவு எடுக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த பட்டப் படிப்பு என்று தனியாகச் சொல்வார்களேயானால், அது குறித்து அரசு ஆராயும்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் புதியதாக சட்டக் கல்லூரி ஆரம்பிக்க உத்தேசம் உள்ளதா? அப்படி ஆரம்பிக்கப்படுமானால், (Professional Courses) கல்லூரிகள் இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்திற்கு முன்னுரிமை தந்து, அங்கே ஒரு சட்டக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, வழக்குரைஞர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும், இருக்கின்ற சட்டக் கல்லூரிகளே அதிகம் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. புதிய சட்டக் கல்லூரி அமைக்கின்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. ஆ. நடராசன்: தலைவர் அவர்களே சட்டக் கல்லூரி வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. அடுத்த ஆண்டாவது புதிய கட்டிடம் எழுப்ப அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல நிதித் தட்டுப்பாடு காரணமாக அதை தற்போது எடுக்க இயலாத நிலை இருக்கிறது. இன்னும் வாடகைக்கு நல்ல இடம் தேடும்படி அரசு அதிகாரிகளைப் பணித்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 149 முதல் 151 முடிய மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப் பெறுகின்றன.